பிரிவு மக்களின்மீது தவறு நடக்கும்போது, அவர்களுக்குச் சாதகமாக இந்த வழக்கைத் தொடர வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு உண்மையை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறவர்கள் மீது எஸ்.சி/எஸ்டி/ஆக்டின்கீழ் இந்த வழக்கைப் பதிவு செய்திருக்கிறார்கள். இதற்கு நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே தவறு இருந்தால், நான் சொல்லுவதிலே தவறு இருந்தால் நான் பொறுப்பேற்பதற்குத் தயாராக இருக்கிறேன். முழுமையாக இந்த வழக்கைத் தவறாகப் போட்டு இன்னும் மிரட்டுகிறார்கள். 17 பேர்கள் மீது அங்கே இருக்கிற ஆள்தான், இங்கே இருக்கிற ஆள்தான் என்று சொல்லி இன்றைக்குப் போலீஸ் வந்து மிரட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்தக் கருத்து குறித்து உரியவர்களிடத்திலே விசாரித்து, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-1-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஆறாவது அறிக்கை. (2000-2001)

4. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஏழாவது அறிக்கை. (2000-2001)

5. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று எட்டாவது அறிக்கை. (2000-2001)

[2001 ஜனவரி 23

6. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஒன்பதாவது அறிக்கை. *(2000-2001)*

7. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்றுப் பத்தாவது அறிக்கை. *(2000-2001)*

8. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் *(முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

9. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் *(இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS